

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதையொட்டி நேற்று (27.8.2024) சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.8.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை சந்தித்து, பயணம் வெற்றி பெற வாழ்த்துத் தெரிவித்தார்.

### இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# மீனவர்களையும் - மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்வீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக. 28 -**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று (27.08.2024) எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், INDTN10MM34 என்ற பதிவெண் கொண்ட இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற 8 இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் 26.08.2024 அன்று கைது செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டுள்ளதோடு, தற்போது 116 இந்திய மீனவர்களும், 184 படகுகளும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் இதுபோன்று தொடர்ச்சியாக கைது செய்யப்படும் சம்பவங்கள், மீனவர்களின் குடும்பத்தினரிடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதோடு, இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் வாழ்வாதாரம் கடற்பரப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவர்களை மட்டுமல்லாமல், அவர்களை நம்பி வாழும் அவர்களது குடும்பத்தினரின் நல்வாழ்வையும் பாதிப்பதாக தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், இந்தியப் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கழக நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் தொடர்ந்த

# அவதூறு வழக்கில் எடப்பாடி பழனிசாமி ஆஜரானார்!

## சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை!

*சென்னை, ஆக. 28 -*

திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தொடர்ந்த அவதூறு வழக்கின் விசாரணைக்காக, எடப்பாடி பழனிசாமி, சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார்.

சென்னை புரசைவாக்கத்தில் ஏப்ரல் 15ம் தேதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய எடப்பாடி பழனிசாமி, மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி நிதியை முறையாக பயன்படுத்தவில்லை என பேசினார்.

இதுதொடர்பாக மத்திய சென்னை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எடப்பாடி பழனிச்சாமி பேச்சு தொடர்பாக அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ. மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜெயவேல் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கில் ஆஜராவதற்காக எடப்பாடி பழனிசாமி நேற்று சிறப்பு நீதிமன்றத்திற்கு வந்தார். அப்போது வழக்கின் விசாரணையை செப்டம்பர் 19ம் தேதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி உத்தரவிட்டார்.

தயாநிதிமாறன் தொடர்ந்த அவதூறு வழக்கு பழனிசாமி சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி நிதியை முறையாக பயன்படுத்தவில்லை என எடப்பாடி பழனிசாமி பேச்சு மத்திய சென்னை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எடப்பாடி பழனிச்சாமி பேச்சு தொடர்பாக அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ. மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை வழக்கில் ஆஜராவதற்காக எடப்பாடி பழனிசாமி நேற்று சிறப்பு நீதி மன்றத்திற்கு வந்தார். வழக்கின் விசாரணையை செப்டம்பர் 19ம் தேதிக்கு ஒத்திவைத்தது சிறப்பு நீதிமன்றம்.

## தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஆக. 28 -*

தமிழகம் நோக்கி வீசும் மேற்குதிசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானமழை பெய்யக்கூடும். இன்று முதல் செப். 1ம் தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களில் லேசானதுமுதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் பந்தலூரில் 7 செமீ, தேவாலா, அப்பர் பவானி எஸ்டேட் ஆகியஇடங்களில் தலா 3 செமீ, கூடலூர் சந்தை, கூடலூர், கிருஷ்ணகிரி மாவட்டம் கேஆர்பி அணை, கோவை மாவட்டம் சிறுவாணி அடிவாரம் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

### ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் செயலாளர்

# கண்டோன்மெண்ட் சி.சண்முகம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக. 28 -**

**ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டக் கழகச்செயலாளராகவும் ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், கண்டோன்மெண்ட் துணைத் தலைவராகவும் இருந்து திறம்பட மக்கள் பணியாற்றிய கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்கள் ( வயது 86) நேற்று (27.08.2024) பிற்பகல் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

மறைவு செய்தியறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு :-

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் கழகத்தை வளர்த்தவர்களில் ஒருவராகத் திகழ்ந்த கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்கள் நேற்று மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் துயருற்றேன்.

கலைஞர் மீது மிகுந்த பற்று கொண்டவராகத் திகழ்ந்த அவர் கழகத்தின் சார்பில் அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று முன்னின்று சிறை சென்றவர் ஆவார்.

காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்திற்கு என்று கலைஞர் பவள விழா மாளிகை கட்டி அதனை கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைத்தது இன்றும் பசுமையாக என் நினைவில் இருக்கின்றது.

கழகமே தனது மூச்சாக இறுதிவரை வாழ்ந்தவர் கண்டோன்மெண்ட் சண்முகம் அவர்கள் ஆவார்கள்! அவரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆந்திரப்பிரதேசம் – குண்டூரில்

# சமூக சீர்திருத்தவாதி பி.பி.மண்டல் 106வது பிறந்தநாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் மாலை அணிவித்து மரியாதை!

*குண்டூர், ஆக.28 -*

சமூக சீர்திருத்தவாதியும் பீகார் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சருமான மறைந்த பி.பி.மண்டல் அவர்களின் 106-வது பிறந்த நாள் விழா ஆந்திரப்பிரதேச மாநிலம் குண்டூரில் பி.பி.மண்டல் சேனா அமைப்பின் சார்பில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மூத்த வழக்கறிஞரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மண்டல் கமிஷன் மூலம் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27% இடஒதுக்கீட்டினை முன்மொழிந்து சமூக நீதியின் நாயகராக பி.பி.மண்டல் அவர்கள் விளங்கியதாக பி.வில்சன் தன்னுடைய உரையில் புகழாரம் சூட்டினார்.

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரியபடி சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் அவசியம், கிரீமிலேயர் முறை ஒழிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த பி.வில்சன், சமூக நீதி தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டியலிட்டார்.

பெரியாரின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளினை அகற்றி, சமூக நீதியைப் பாதுகாக்கும் நூற்றாண்டு கால போராட்டத்தின் முக்கிய சாதனையாக தமிழ்நாட்டில், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் திட்டத்தின் வாயிலாக, பாலின மற்றும் சாதி பாகுபாடு இல்லாமல் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்களாக மாறுவதற்கான கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக அனைத்துச் சமூகத்தினரும் தற்போது அர்ச்சகர்களாக கோவிலின் கருவறைக்குள் நுழைய வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக நிகழ்வினையொட்டி குண்டூர் நகரில் உள்ள பி.பி.மண்டல் அவர்களின் சிலைக்கு பி.வில்சன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த விழாவில் பி.பி.மண்டல் சேனா அமைப்பின் தலைவர் டாக்டர். ஆல வெங்கடேஸ்வரலு மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களும் பங்கேற்றனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்ற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு நடத்தினார். உடன் சுற்றுலா ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குனர் சி. சமயமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றிய, நகர, பேரூர் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் கடலூரில் நடைபெற்றது. வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, அவைத் தலைவர் ஆசிரியர் ஜி.ராமமூர்த்தி, வடலூர் நகர கழகச் செயலாளர் த.தமிழ்ச்செல்வன், நகர மன்றத் தலைவர் சு.சிவக்குமார் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.